Regd. No. M. 4593. 'KUDI ARASU'

# குடி அரசு

Estd. 1924. தனிப்பிரதி விலை [ரூ. 0-1-6]

வருட சந்தா ரூ. 5. சனி வெளியீடு.

மலர் 18 | ஈரோடு, 25-8-1945 ஆவணி-மீ 9௳ | இதழ் 46

## அன்றும் இன்றும்

### சுயமரியாதை இயக்கத்தின் கொள்கை

### உண்மைச் சமதர்மவாதிகளுக்கு இதில்உள்ள குறை என்ன?

பெரியாரால் துவக்கப்பட்டு, பெரியாராலும், பெரியாரது நம்பிக்கைக்குப் பாத்திரமான தோழர்களாலும், பெரியார் தலைமையில் நடந்துவரும் சுயமரியாதை இயக்கமானது தென்னிந்தியாவில் இந்த சுமார் 20வருஷகாலத்தில் பாமர மக்களிடையில் வேரூன்றிப் புதைந்துகிடந்த ஜாதி, மதம், புராணம் இதிகாசம், அவதாரங்கள், ஆழ்வார்கள், நாயன்மார்கள், மகான்கள் என்பவற்றின் பேரால் ஏற்பட்டிருந்த குருட்டுநம்பிக்கைகளும், மூடப்பழக்க வழக்கங்களும், அறிவுக்கொவ்வாத அடிமைத்தன்மைகளும், மற்றும் தேசியத்தின்பேரால் மேல்ஜாதிக்காரர்களும் பொருளாதாரத்தில் மேன்மையடைந்தவர்களும் தங்கள் நலனுக்கென்றே நடத்திவந்த அரசியல் புரட்டுகளும், மேலும் மகாத்மாக்கள், ரிஷிகள், மகான்கள் என்பவர்களின் மூலம் தெய்வீகத்தின்பேரால் நடத்திவந்த பித்தலாட்டங்களும் ஒரு அளவுக்காவது வெளியாக்கப்பட்டு, மக்களுக்குள் தக்கதொரு விழிப்பு ஏற்படுத்தி, புரட்சி உணர்ச்சியைக் கிளப்பிவிட்டிருக்கிறது. இது, இதனால் பாதிக்கப்படும் தனிப்பட்ட சுயநல உணர்ச்சி கொண்ட நம் எதிரிகள் தவிர வேறு யாராலும் மறுக்கமுடியாத உண்மையாகும்.

இப்படிப்பட்ட இந்த சுயமரியாதை இயக்கத்துக்குக் கொள்கை இல்லையென்றோ, திட்டங்களில்லையென்றோ சொல்வதற்குச் சிறிதும் இடமில்லாமல் அவ்வப்போது பெரியாரவர்களால் வெளியிடப்பட்டு பிரசாரம் செய்யப்பட்டு வந்திருப்பது மாத்திரமல்லாமல் 1926-ம் வருஷம் முதற்கொண்டு இன்று வரை நகரங்கள், பட்டணங்கள், கிராமங்கள் வரை உள்ள நூற்றுக்கணக்கான ஊர்களில், பல் நூற்றுக்கணக்கான மகாநாடுகள் கூட்டி அநேக தீர்மானங்களும் செய்திருப்பதோடு பல நூற்றுக்கணக்கான மகாநாடுகள் உள்பட ஏராளமான இடங்களில் பல தீர்மானங்களை செய்கையில்செய்துகாட்டுவதன் மூலம் நடைமுறைக்கும் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. எடுத்துக் காட்டாக முதன்முதலாகத் திருமணம் முதலிய சமுதாய சடங்குகளில் அழைப்புத் தாள்களில் நிரம்பிக்கிடந்த ஆரிய மொழிகள் விடுபட்டு மிகுதியும்தமிழ் மொழியில் வரையப்பட்டதும் அழைப்புச் சொற்றொடர்கள் தமிழர்க்கேற்ற முறையில் அமைக்கப்பட்டது முதல் வீட்டு சடங்குகளில் மாறுதல், சடங்கு எண்ணங்களில் மாறுதல், கடவுளின் பெயரால் உள்ள ஆதாரங்களில் மாறுதல், அவற்றின் கருத்துக்களில் மாறுதல், வழிபாடுகளில் மாறுதல், கடவுள் தத்துவங்களில் மாறுதல், மக்களின் வகுப்புப் பிரிவினை நடப்புகளில் மாறுதல், மக்களுக்கு மக்கள் உள்ள பேதங்களில் மாறுதல், இனங்களில் மாறுதல் இன்னும் எத்தனையோ துறைகளில்மாறுதல் ஆகிய இவைகளை எப்படிப்பட்ட பிடிவாத உணர்ச்சியுள்ளவர்களிடத்திலேயும் காணும்படிச் செய்திருக்கிறது. இதை நம்மை எதிர்ப்பவர்களிடமும் மாறுதல் கொள்கைகளை மறுப்பவர்களிடமும்கூடக் காணலாம்.

சுயமரியாதை இயக்கத்திற்கு சமுதாய சம்பந்தமான கொள்கை என்ன? என்று யாராவது தெரியாதவர்கள் உண்மையில் இருப்பார்களானால் அவர்களுக்கு 20-வருடத்துக்கு முன்னால் இயக்கத்தின் முதல் கொள்கையாக ஏற்படுத்தப்பட்டதாவது:-

முதலாவதாக மக்களின் மூடநம்பிக்கை ஒழிக்கப்படவேண்டும் என்றும்,

இரண்டாவதாக மனித சமுதாயத்தில் உள்ள ஜாதிபேதம், உயர்வு தாழ்வு ஒழிக்கப்படவேண்டும் என்றும்,

மூன்றாவதாக பொருளாதார பேதங்களும், வாழ்க்கை பேதங்களும் ஒழிக்கப்படவேண்டும் என்றும் சொல்லி,

இந்தக்கொள்கைகளை உயிர்நாடியாக, முக்கியமாகக்கொண்டு இவற்றிற்குத் தேவையான பல திட்டங்களும் வகுக்கப்பட்டிருக்கின்றன.

இப்படிப்பட்ட கொள்கைகளும் திட்டங்களும் நேரம் காலம், சமயம் சந்தர்ப்பம் பாராமல், ஓய்வு ஒழிச்சல் இல்லாமல், இரவும் பகலும் காட்டில் மூலை முடுக்குகள், சந்து பொந்துகள் தோறும் பெரியாராலும் அவரது குழாத்தினராலும் பிரசாரம் செய்துவரப்பட்ட இந்த இயக்கத்துக்குப் பிறகுதான் பல கடவுள், வேதம் மோட்ச நரகம், சாஸ்திரம் என்பவைகளை அலட்சியம்செய்து சாரதாசட்டம் முதல் கோவில் பிரவேச சட்டம்வரை பல சட்டங்களும், தீண்டாமை பாராட்டக்கூடாதென்பதான சில சர்க்கார் உத்தரவுகளும், வகுப்பு உரிமைகளும் ஆன பல காரியங்கள் நடக்கத் துவங்கி இருக்கின்றன.

மற்றும் சுயமரியாதையியக்கத்திலேயே சுயமரியாதைக்காரர்கள் சட்டசபைகளுக்குப் பெரும்பான்மையோராய்ச் சென்று ஏதாவது காரியம் செய்யக்கூடிய சக்தி பெற்றால், அதைக்கொண்டு என்ன காரியத்தைச் செய்வது, செய்வார்கள், என்பதை விளக்கி 1932-ம் வருஷம் டிசம்பர் மாதத்திலேயே வெளியிடப்பட்டுமிருக்கிறது. அதில் காணப்படும் முக்கிய திட்டங்களாவன.

1. பொதுஜன செளகரியங்களுக்கு ஏற்பட்ட சாதனங்களை தனிப்பட்ட மனிதர்கள் அநுபவிப்பதென்பதற்கும், ஜாதிமத சம்பந்தமான கொடுமைகளுக்கும் பாதுகாப்புகளாய் இருக்கும் அறிவுக்கு ஒவ்வா முறைகளை, தன்மைகளை ரத்துசெய்யவேண்டும்.

பாமர ஜனங்களை அவர்களது பொருளாதாரக் கொடுமையில் இருந்தும், ஜாதி மதக் கொடுமையில் இருந்தும் விடுவித்தும் சுதந்திர மனிதர்கள் ஆக்குவதற்கும், பொதுஜன அவசியத்திற்கு என்று ஏற்படுத்தப்படுகிற தொழில் முறைகள் போக்கு வரத்து சாதனங்கள் ஆகியவைகளின் நிர்வாகத்தையும் அதன் இலாபத்தையும் தனிப்பட்ட மனிதர்கள் அடையாமலிருப்பதற்கும் வேண்டிய

ரோஜா முத்தையா
ஆய்வு நூலக அறக்கட்டளை

காரியங்களை அரசியல் ஸ்தாபனங்களின் மூலமாகச் செய்யவேண்டும்.

திட்டங்களாவன:—

2. தனிப்பட்ட தொழிற்சாலைகள், ரயில், கப்பல் முதலியவைகளில் தொழிலாளர்களுக்கு எப்பொழுதும் தொழில் இருப்பதற்கு ஒரு ஜவாப்தாரித்தனத்தையும், அவர்களுடைய நல்வாழ்க்கைக்கு வேண்டிய குறைந்தபட்ச வேதனத்தை நிர்ணயப்படுத்தி அதற்கு ஒரு உறுதிப்பாட்டையும் செய்வதற்கு சட்டத்தின் மூலம் ஒரு ஏற்பாடு செய்யவேண்டும்.

3. நில சொந்தக்காரர்களாயில்லாமல் விவசாயத்தில் ஈடுபட்ட தொழிலாளிகளுக்கு அவர்களது வாழ்க்கைச் செலவோடு வெள்ளாமையில் ஒரு நியாயமான பங்கு விகிதம் கிடைக்கும்படி செய்யவேண்டும்.

4. கோவில், பிரார்த்தனை இடங்கள் முதலிய மத ஸ்தாபனங்களின் சொத்துக்கள், வரும்படிகள் ஆகியவைகளைப் பொது ஜனங்களின் தொழில், கல்வி, சுகாதாரம், வீட்டு வசதி, அனாதைப் பிள்ளைகள் விடுதி ஆகியவைகளுக்குப் பயன்படுத்த சட்டம் செய்யவேண்டும்.

5. இந்திய சமூகத்தில் ஜாதிமதப் பிரிவு முதலியவைகளைக் குறிக்கக் கூடிய குறிப்புகள் எதையும் பொது ஆதாரங்களில் (ரிக்கார்டுகளிலிருந்து) எடுத்துவிடுவதற்கும், அம்மாதிரிப் பட்டம் உடையவர்களைப் பொது வேலைகளில் இடம் பெறாமல் இருக்கும்படி செய்வதற்கும் சட்டம் செய்யவேண்டும்.

6. முனிசிபாலிட்டி முதலிய ஸ்தாபனங்களின் மூலமாகவே போக்குவரவு சாதன வசதி, வீட்டுவசதி, பால்வசதி, வைத்திய வசதி, ஆரம்பக் கல்வி வசதி முதலியவைகள் நடைபெறும்படி ஏற்பாடு செய்யவேண்டும்.

7. இவைகளை நிறைவேற்ற என்ற நிபந்தனை மீது சட்டசபை, முனிசிபாலிட்டி முதலிய ஜனப்பிரதிநிதி ஸ்தாபனங்களுக்கு மேற்கண்ட கட்சியின் பேரால் அபேட்சகர்களை நிறுத்தவேண்டும்.

8. கட்சி அபேட்சகர்கள் மேல்கண்ட திட்டங்களுக்கு உறுதிகூறி கையெழுத்திடவேண்டும்.

9. எல்லாச் சட்டசபை, முனிசிபல் தாலூக்கா, ஜில்லா சபை ஆகியவற்றின் தேர்தலுக்கு வயதுவந்த யாவருக்கும் ஓட்டுரிமை ஏற்படும்படி செய்யவேண்டும்.

ஆகிய இவையும் மற்றும் சில திட்டங்களும் இன்றைக்கு 13 வருஷங்களுக்கு முன்னால், அதாவது பெரியார் ரஷ்யாவிலிருந்து வந்தவுடனே இந்த நாங்கள்தான் சுயமரியாதைக்காரர்கள் என்றும், ரிஜிஸ்டர் செய்துகொண்டவர்கள் என்றும் சொல்லிக் கொள்ளும் பலருடைய எதிர்ப்பின் பேரிலும், இதற்காகக் கட்சியைவிட்டே வெளியில் போய்விட்ட பலருடைய பிணக்கின் பேரிலும் செய்யப்பட்ட தீர்மானங்களாகும். இதை 1932-ம் வருஷ 'குடியரசு'லேயே பார்க்கலாம்.

இத்தீர்மானங்கள் சுயமரியாதை இயக்கத்தோடு நின்றுவிடாமல் சற்றேறக்குறைய அதற்குச் சமீபத்தில் ஜஸ்டிஸ்கட்சிக்குள்ளும் புகுத்தப்பட்டு சில வார்த்தை திருத்தங்களுடன் ஜஸ்டிஸ்கட்சியாராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டவையாகும். ஆகவே காங்கரஸ்காரர்களோ, வேறுயாவர்களோ, வெளிநாட்டுக்காரர்களோ, நமக்குள்ளாகவே இருக்கும் வயிற்றுப் பிழைப்புப் பொது வாழ்வுக்காரர்களோ சுயமரியாதைக்காரர்களுக்குத் திட்டமில்லை என்று சொன்னால் அதை மானமற்ற, மனிதத்தன்மை அற்ற இழிமைக்குணம் என்று சொல்லாமல் வேறு என்ன சொல்லுவது? என்று நீங்களே சொல்லுங்கள்.

## ஓட்டலில் சமத்துவம்

3-8-45ல் நடைபெற்ற திருநெல்வேலி நகராட்சி மன்றக்கூட்டத்தில் "நெல்லை ஓட்டல்களில் ஆதிதிராவிடருக்கு சமத்துவம் கொடுக்கப்படவில்லை. ஆகவே அவ்வோட்டல்களின் லைசன்சு ரத்து செய்யப்படவேண்டும்" என்ற தீர்மானத்தை விளக்கிப்பேசுகையில், கவுன்சிலரும், திராவிடர் கழகத் துணைத்தலைவருமான தோழர் எ. அருணாசலம் இத்தீர்மானம் நிறைவேறாவிடில் தம்மைச் சேர்ந்தவருடன்தாம் இஸ்லாம் ஆகிவிடுவதாகக் கூறினார். பின்னர் "ஓட்டல்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்" என்று தீர்மானம் நிறைவேறியது.

## பிறப்பு

பெங்களூர் நகர திராவிடர் கழகத் தலைவர் தோழர் சீனுவாசன் அவர்கள் துணைவியார் 5-8-45-ல் ஓர் ஆண் குழந்தையீன்றார். தாயும் சேயும் சுகமாயுள்ளனர்.

*

தஞ்சை சுயமரியாதை இயக்கத் தோழரான எம். எம். நடராசனது வாழ்க்கைத் துணைவியாருக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்து தாயும் சேயும் சுகமாயுள்ளனர். குழந்தைக்கு சக்கரவர்த்தி என்று பெயரிடப்பட்டு அதன் நினைவாக "குடி அரசு"க்கு ரூ. 1 அளிக்கப்பட்டது.

*

காஞ்சித் திராவிட கழகத் தலைவர் தோழர் எஸ். வன்னிப்பெருமாள் மனைவியாருக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்து அண்ணாத்துரை எனப் பெயரிடப்பட்டு அதன் ஞாபகார்த்தமாக "குடி அரசு", "திராவிடநாடு" இதழ்களுக்கு தலா ஒரு ரூபாய் தரப்பட்டது.

## சென்னை திராவிட மாணவர் கழகம்

ஷை கழகத்தின் பொதுக் கூட்டம் ஒன்று 14-8-45 மாலை "முல்லைப் பதிப்பக"த்தில் நடந்தது. தோழர் க. அன்பழகன் பி. ஏ. (ஆனர்ஸ்) தலைமையில் தோழர்கள் குஞ்சிதபாதம் பி. ஏ., மா. குமாரசாமி, செம்பியன், குழந்தைவேலு ஆகியோர் மாணவ உலகின் மறுமலர்ச்சியை விளக்கிப்பேசினர். இவ்வாண்டிற்குக் கீழ்க் கண்டவர்களைச் செயலாளர்களாகத் தெரிந்தெடுத்த பின் நன்றிகூறலுடன் கூட்டம் முடிவுற்றது.

தோழர்கள் கே. ஏ. குஞ்சிதபாதம் பி. ஏ., தலைவர், ஏ. தியாகராசன் துணைத் தலைவர், மா. குமாரசாமி, வெங்கடாசலம் செயலாளர்கள், திராவிடச்சேய்(குழந்தைவேலு)பொருளாளர்.

---

லால்குடி தாலுக்கா பெற்றோர் சங்கக் கூட்டம் ஓமாந்தூர் போர்டு பாடசாலையில் 26-7-45 அன்று சிறப்பாக நடைபெற்றது.


## ஏஜண்டுகள் தேவை

சேலம் நாமக்கல்லிலிருந்து சென்னை மாகாண ஷெடியூல்டு வகுப்பு பெடரேசன் துணைச் செயலாளர் திரு பி. முத்துசாமி அவர்களை ஆசிரியராகக் கொண்டு "சமத்துவம்" வாரப்பத்திரிகை 23-8-45தேதி முதல் வியாழன் தோறும் வெளிவரும். இப்பத்திரிகை ஷெடியூல்டு வகுப்பு மக்கள் நலம்கருதி சீர்திருத்தக் கொள்கையுடன் ஊழியம் புரியும்.

ஆண்டுசந்தா ரூ. 4—0—0.
தனிப்பிரதி 0–1–0

எங்கும் ஏஜண்டுகள் தேவை.

விபரத்திற்கு:—

மானேஜர், சமத்துவம் ஆபீஸ், நாமக்கல், சேலம் ஜில்லா.

## தானே இயங்கும் கைத் துப்பாக்கி

(தற்காப்புக்காக)

ஒரே தடவையில் 6-குண்டுகளைச் சுடும், துஷ்ட மிருகங்கள், திருடர்கள் அபாயத்திலிருந்தும் தப்பித்துக் கொள்ளலாம். லைசென்ஸ் தேவையில்லை, குண்டுகளுடன் விலை ரூ. 8. சிறந்ததாகம் ரூ 12. போஸ்ட்டேஜ் பாக்கிங் ரூ. 1/4. ஒவ்வொரு ஆர்டருடனும் ஒரு பொம்மை கைகடிகாரம் இனாம். கடிதப் போக்குவரத்து ஆங்கிலத்தில் எழுதவும்.



Calcutta watch co., (sec 637)
P. B. No. 12203, Calcutta.

# திருச்சியில் மாநாட்டு 2-வது கூட்டம்

## பெரியார் தலைமையுரை

23-8-45-ந் தேதி காலையும் மாலையும் திருச்சி டவுன் ஹால் மண்டபத்தில் ஜஸ்டிஸ் கட்சி சு. ம. மாகாண மாநாட்டு காரியக் கமிட்டிக் கூட்டம் பெரியார் தலைமையில் நடந்தது. சென்ற 12ந் தேதி கூட்டத்திற்கு வந்திருந்த பலரும் மற்றும் மேற்கொண்டு தோழர்கள் கும்பகோணம் சின்னத்தம்பி வேலூர் ஆர். வி. ராஜன், கே. வி. அழகிரிசாமி, டி. என். ராமன், சேலம் எம். ஆர். சித்தய்யா, கே. ஜகதீசன், மா. சு. அருணாசலம், நடேசன், சிவகங்கை ராமசுப்பிரமணியம், ராஜசேகரன், இமயவரம்பன், திருவண்ணாமலை சித்தா ரெட்டியார், ஜோலார்பேட்டை பார்த்தசாரதி, மதுரை முத்திருளாண்டி முதலிய மேல் கொண்டு 30, 40 பேர்கள் வந்து கையொப்பமிட்டு கலந்து கொண்டார்கள். பொன்மலை தோழர்கள் சுமார் 100 பேர் வரையிலும் வந்திருந்தார்கள். மொத்தத்தில் கூட்டம் மண்டபம் நிறைந்திருந்தது.

பெரியார் தலைமையில் நடவடிக்கை துவக்கப்பட்ட உடன் பெரியார் எழுந்து வரவேற்று சென்ற கூட்டத்தில் தான் கேட்டுக்கொண்டபடி மாநாட்டு செலவுக்குப்பணம் எவ்வளவு கொண்டு வந்திருக்கிறீர்கள் என்று கேட்டவுடன் தோழர்கள் ஜெகதீசன், ஆர். என். அருணாசலம், எம். ஆர். சித்தயன் அவர்கள் 500 ரூபாயும், தோழர் நீலமேகம், சின்னத்தம்பி ஆகியவர்கள் 500 ரூபாயும், ஈ. வெ. கி. சம்பத்து 500 ரூபாயும், தோழர்கள் ராஜசேகரன், ராமசுப்பையா, இராமசுப்பிரமணியன், இமயவரம்பன் ஆகியவர்கள் 250 ரூபாயும், தோழர் பார்த்தசாரதி 100 ரூபாயும், துறையூர் செட்டியார் 50 ரூபாயும், முறையே சேலம், தஞ்சை, கோயமுத்தூர், இராமநாதபுரம், வடஆற்காடு, திருச்சி, துறையூர் ஆகியவற்றின் சார்பாக சுமார் 2000 ரூபாய் கொடுக்கப்பட்டன. அதை தோழர் வேதாசலம் அவர்களிடம் தலைவர் கொடுத்தார். இராமநாதபுரத்திற்கு 500 ரூபாய் தருவதாக முன் கூட்டத்தில் ஒப்புக்கொண்டது போதாது என்றும், 1000க்கு குறைவில்லாமல் தரவேண்டும் என்றும் தலைவர் சொன்னவுடன் அந்தப்படியே ராமநாதபுரம் தோழர்கள் ஒப்புக்கொண்டார்கள்.

சென்னை, செங்கல்பட்டு, திருநெல்வேலி, மதுரை, தென்ஆற்காடு முதலிய ஜில்லாக்களுக்கு அன்று பணம் ஒன்றும் வரவில்லை என்றாலும் பணம் வசூலித்துக் கொண்டு இருப்பதாகவும் அடுத்த கூட்டத்திற்குமுன் அனுப்பிக் கொடுப்பதாகவும் தோழர் டி. சண்முகம், திராவிடமணி முதலியவர்களிடமிருந்து கடிதங்கள் வந்தன. இதன் பிறகு மாநாடு நடவடிக்கைகள் பற்றிய விபரங்களைப் பற்றி நன்றாய் விவாதித்துப் பேசிய பின்பு காரியதரிசிகள் செய்த வேலைகளை ஒப்புக் கொண்டு காரியதரிசிகளுக்குச் சில அதிகாரங்கள் கொடுக்கும் தீர்மானங்கள் செய்யப்பட்டன. மற்றும் சிலர் ரூ. 5 வீதம் கொடுத்து வரவேற்புக்கழக அங்கத்தினர்களாகச் சேர்ந்தார்கள்.

பிறகு மேலும் சில தோழர்கள் நிர்வாகக்கமிட்டிக்கு பிரேரேபிக்கப்பட்டார்கள். தலைவர் முன்னமேயே 50-மெம்பர்கள் ஆகிவிட்டார்கள் என்று சொல்லி அவைகளை குறித்துவைத்துக் கொண்டிருக்கிறார்.

பிறகு தலைவர் கூட்டத்தை முடிவுக்குக் கொண்டு வருகையில் முடிவுரையாக சில விஷயம் எடுத்துச் சொன்னார்.

"தோழர்களே தலைவன் என்கின்ற முறையில் சில விஷயங்கள் சொல்லுகிறேன். அவை என்னுடைய சொந்த அபிப்பிராயம் என் ... களுக்கு எனக்கு மாகாண பொது மாநாடு அடிக்கடி நடக்கவேண்டும் என்பது பற்றிக் கவலை இல்லை. ஜில்லா தாலுகா மாநாடுகள் அடிக்கடி நடக்கவேண்டும். ஏனெனில் பின் சொல்லப்பட்டவை பிரசாரக் காரியத்திற்கு ஆகச் செய்யப்பட வேண்டியவையாகும். பெரிய மாகாண மாநாடுகள் ஏதாவது புதிய காரியம், புதிய கருத்து, புது மாறுதல்கள் ஆகியவைகளுக்கு ஆக கூட்டப்படவேண்டியதாகும். சென்னையில் 1939-ல் நடந்த மாகாண மாநாட்டுக்குப் பிறகு மாநாடு கூட்ட எனக்கு இஷ்டம் இல்லை, அப்படி இருந்தும் திருவாரூரில் ஒரு மாநாடு கூட்டினோம், அது எவ்விதப் பயனும் அளிக்காமல் சிறிது தொல்லையையே கொடுத்தது என்றாலும் அதையும் சமாளித்துக்கொண்டேன், அதாவது நாம் இந்துக்கள் அல்ல என்றும், நாம் திராவிடர்கள் என்றும், திராவிடநாடு பெறுவது நமது இலட்சியம் என்றும், சில புதுத் தீர்மானங்கள் செய்தோம், அதன் பிறகு அதைப் பிரசாரம் செய்துவந்தோம் வருகிறோம். அதன் பின்பு 2, 3 வருஷ காலமாக மாநாட்டுக்கு அவசியம் இல்லையானாலும் மாநாடு நடத்த வேண்டும் என்று சில தோழர்கள் கேட்டுக் கொண்டார்கள். யார் வேண்டுமானாலும் நடத்தட்டும் என்று சும்மா இருந்தேன். அதற்குள் என் தலைமைப் பட்டம் போய்விடுமென்று நான் பயப்படுவதாகவும் அதனாலேயே மாநாடு நடத்தாமல் காலம் தாட்டி வருவதாகவும் சிலர் விஷமப் பிரசாரம் செய்தார்கள். பிறகு சில தோழர்களை வேண்டிக்கொண்டு சேலத்தில் நடத்திக் கொண்டேன். அதில் நடந்த விஷயங்களும் அதன் பயனாக ஏற்பட்ட பலன் என்ன என்பதும், உங்களுக்குத் தெரியும். ஆனாலும் அதிலும் ஒரு பெரிய நன்மை ஏற்பட்டது. கட்சி வெளியிலும் பரிசுத்தமடைந்தது பொது மக்கள் ஆதரவும் நம்பிக்கையும் பெற்றது. 35000 மெம்பர்களும், 200 கிளைகளும் எவ்வளவோ பேர் ... தொண்டர்களுக்கும் ... நத்திற்கும் இடையில் ஏற்பட்டதான ... பரம் மகிழ்ச்சி ...

ஸ்பெஷல் மாநாடு கூட்டவில்லை என்று கேட்டவண்ணம் இருந்தார்கள். நான் தயங்கினேன் என்றாலும் இரண்டொரு தடவை முயற்சி செய்து விட்டுவிட்டு பல சம்பவங்களின் தன்மையை எதிர்பார்த்துக் காத்திருந்தேன். அவை ஒருவாறு முடிந்து நிலைமை விளங்கிவிட்டது.

இப்போது சரியான சமயமாக இருக்கிறது. நடக்கவேண்டியது தான் அவசியமாக இருக்கிறது. பணமும் வருகிறது. மக்களுக்கு உற்சாகமுமிருக்கிறது. தோழர் வேதாசலம் மிகவும் பயந்தவர். தோழர் அண்ணாதுரை மிக்க சாவகாசமாய்க் காரியம் செய்பவர். இவர்கள் தலைமேல் மாநாட்டின் எல்லாப் பொறுப்பும் ஏற்றப்பட்டு விட்டது, உதவிக்கு யாரும் இல்லை என்றாலும், வேறு பேர்கள் இல்லாததால் அவர்கள் சகல பொறுப்பு ஏற்றுக்கொண்டது மிகவும் தைரியமான காரியமாகும். ஏதோ செய்கிறார்கள். அவர்களுக்கு ஊக்கமளியுங்கள், அவர்களை நம்புங்கள். என்னை சர்வாதிகாரி என்று குறைகூறுவது போல் அவர்களைக் குறைகூறாதீர்கள். பணம் இயக்கத்தைத் தவிர வேறு எங்கும் போய் விடாது, சூழ்ச்சிகள் எதுவும் நடக்க அவசியமும் இல்லை. ஏனெனில் கட்சியின் நிலைமை தெளிவுபட்டு ஒருமுகப்பட்டுவிட்டதால் இதில் சூழ்ச்சி தேவையே இல்லை. நான் யாரையும் எந்தக்காரியத்தையும் பொறுப்பு ஏற்றுக்கொண்டவர்கள் இடம் விட்டுவிடுவது வழக்கம். பொறுப்பு ஏற்காமல் அதிகாரம் செய்பவர்களை அலட்சியமாய் விட்டுவிடுவதும் வழக்கம். நம் இயக்கம் ஒர் தொண்டாற்றி தொல்லை ஏற்றுக்கொண்டு அவதிப்படவேண்டிய இயக்கமாகும். இதில் வெறும் அதிகாரக்காரருக்கு இடங்கொடுத்தால் தொண்டாற்றுகிறவர்கள் சலிப்படைந்து விடுவார்கள். ஒரு தலைவன் வேண்டும் அவன் நடத்துபவனாய் இருக்க வேண்டுமே ஒழிய, நடத்தப்படுபவனாய் இருக்கக்கூடாது. அதிகாரம் போல் பின்பற்றுபவர்கள் இருக்க வேண்டும், அவர்கள் தலைவர் அபிப்பிராயத்துக்கு ஒத்துக்கொண்டு (இசைந்து) உழைக்கிறவர்களாக இருக்கவேண்டும். அதற்குத்தான் ஒத்துழைப்பு என்று பேர். அதிகாரம் செய்துகொண்டு தலைவனை வெறும் கேட்பவர்களாக இருக்கக் கூடாது. பலபேர் அதிகாரம் செய்தாலும் காரியம் கெட்டுப்போகும்.

சிலருக்கு பின்பற்றுவது அவமானமாய் இருக்கலாம். அப்படிப்பட்டவர்களுக்கு வேறுபல கட்சி அமைத்துக்கொண்டால் வசதியும் வேறு காரியங்களும் அப்படிப்பட்ட தொண்டர்களை ஆதரிக்க பல தலைவர்களும் இருக்கிறார்கள்.

ஆனால் நம் கட்சி அப்படிப்பட்டவை அல்ல. பின்பற்றி தொல்லைப்பட வேண்டியது, சிறைவாசம் குடும்பகஷ்டம், வழக்கு, பாமர மக்களிடம் அவமதிப்பு, சர்க்காரின் வெறுப்பு முதலியவை அடையவேண்டிய சங்கடமான காரியத்தில் பட்டதாகும். இதற்கு அப்படிப்பட்ட காரியங்களில் நம்பிக்கையும் அவற்றிற்குத் தயாரும் தகுதியும் உள்ளவர்களுக்கே இடம் இருக்க முடியும் இல்லாதவர்கள் வீண் மனச் சங்கடமும், கட்சிப் போக்கைத் தடைப்படுத்தி முட்டுக்கட்டைபோடும் வேலையுமே செய்ய வேண்டி இருக்கும். இந்த முட்டுக்கட்டைக்காரரிடம் எனக்கு காங்கிரசில் இருந்த காலம் முதல் அனுபவம் உண்டு. அவசியம் இல்லாத காலம்வரை தெரியாதவன்போல் இணங்கி இருப்பேன்! அவசியம் ஏற்பட்டதும் யாரையும் உதறித் தள்ளிவிட்டு என் காரியத்தைத் தாமதிக்க முனைந்து விடுவேன், அப்படிச்செய்தால்தான் உண்மையாகப் பாடுபடுவதாய் கருதிக் கொண்டிருப்பவனுக்கு திருப்தி ஏற்படும் இது இயற்கை. ஆதலால் "சர்வாதிகாரம்" என்பதைக் குறைகூறாதீர்கள், ஜனநாயகம் என்பதே பித்தலாட்டமான காரியம் அதிலும் நமக்கு அது பித்தலாட்ட முட்டாள்தனமானதுமான காரியம். நீங்கள் பெரிதும் இந்த இயக்கத்தில் தொண்டாற்றுவதை என்னிடம் நம்பிக்கையுள்ளவரை என் காரியத்திற்கு உதவி செய்வதாய் கருதுங்கள், நம்பிக்கை அற்றபோது என்னைத் தள்ளி விடுங்கள் அல்லது என் தலைமையை உதறித் தள்ளிவிட்டு, வீட்டுப் போய் ஒரு கட்சி அமைத்துக் கொள்ளுங்கள். அந்தமாதிரியாக இருந்தால்தான் சுயநலமற்ற தொண்டு, பொறுப்புள்ள கவலையுள்ள தொண்டு செய்ய முடிகிறது. இதை 25 வருஷமாய்ச் சொல்லி வருகிறேன். 'குடி அரசை'ப் பாருங்கள், என் பலபேச்சைப் படியுங்கள், மிரானையும் செல்வாக்கும் ஏற்படுகிறதை இவ்வளவுப்பார்த்துக்கொண்டும் கேட்டுக்கொண்டும், கூடவே இருந்து 'பெரியார் கூறுகிறபடி' நடப்பதாகப் பொய் சத்தியம் செய்வதும், உறுதி கூறுவதும், தங்களுக்குத் தனிசெல்வாக்கு ஏற்பட்டதாக நினைத்த உடன் அல்லது அசௌகரியம் ஏற்பட்டவுடன் பெரியார் சர்வாதிகாரம் என்று கூறுவதும், நாணையமான காரியமாகாது. நமக்கு வேண்டியது நம் இழிவும், நம் அடிமைத்தன்மையும் நீங்கவேண்டியது. இதற்கு என் வழி தனி வழி, சுயேச்சை வழி இதற்கு நீங்கள் உதவி செய்யுங்கள் இதுதவிர தனி வழி, சுயேச்சை வழி உள்ளவர்கள் தனியாய், சுயேச்சையாய் நடத்துங்கள். என் மீது கோபியாதீர்கள், முட்டுக்கட்டைபோடாதீர்கள். சில தோழர்கள் பேசுவதுபோல் "முட்டாள்களாய் இருக்கும் வரை" என்கூட இருந்ததாகவும் இப்போது அறிவு ஏற்பட்ட உடன் விலகி கெட்டிக்காரர்களாக உபதேசகர்களாக ஆகி விட்டதாகவும் கூறிப் பெருமை அடைவதுபோல் மற்றவர்களும் ஒவ்வொருவரும் முட்டாள்களா அறிவாளிகளா என்று இப்போதே சிந்தித்துப் பார்த்து தொண்டில் இறங்குங்கள். ஏனெனில் எதிர்காலத்தில் சமீபத்தில் உங்களுக்கு பெரிய கஷ்டத்தை ஏற்றுக் கொள்ளவேண்டிய சந்தர்ப்பம் வரும். அப்போது மற்றவர்கள்போல் என்னை சர்வாதிகாரி என்று குற்றம் சாட்டி மற்றவர்கள்போல் கைவிட்டு ஓடிவிடாதீர்கள். தொல்லை கொடுக்காதீர்கள்" என்பதாகப் பேசினார்.

## போஸ் மறைவு

சுபாஷ்சந்திரபோஸ் பாங்காங்கிலிருந்து டோக்கியோவுக்குப் பறந்து செல்லுகையில் விமான விபத்து ஏற்பட்டு இயற்கை எய்தினார் என்று ஜப்பானிய செய்தி ஸ்தாபனம் அறிவிக்கிறது.

## மணமகள் தேவை

ஆரியவைசிய குலத்திலுதித்தவரும், தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்தவரும், சுமார் மூவாயிர ரூபாய் பெறுமான சொத்துடையவரும், சமையல் தொழில் செய்துவருபவரும், 35 வயதுடையவருமான, ஜெ. குப்புசாமி செட்டியார் என்பவருக்கு, மணமகள் தேவை.

மணமகள் ஆரிய வைசிய குலத்துதித்தவராயும், சுமார் 20 வயதுடையவராயும், ஒழுக்கமுடையவராயும், திடகாத்திர சரீரமுடையவராயும் இருத்தல்வேண்டும். விதவையாயினும் நலம், மணம் சீர்திருத்தமுறைப்படி நடத்தப்படும்.

விபரமறிய விரும்புவோர் கீழ்காணும் முகவரிக்கு 1½ அணா தபால் தலை அனுப்பித் தெரிந்துகொள்ளவேண்டும்.

முகவரி: T. N. N. கவிந்த்ராம்,
திராவிடர் கழகம், வாணாடி P. O.
திருவண்ணாமலை வழி.

...ச்சி நூலக அறக்கட்டளை

## இவ்வார நிகழ்ச்சிகள்

வேலூர் (சேலம்) திராவிடர் கழக ஆண்டுவிழா 26-8-45 காலை 10 மணிக்கு கழகக் கட்டிடத்தில் நடைபெறும். பெரியார் ஈ. வெ. இராமசாமி, தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், ஏ. பி. ஜனார்த்தனம், எஸ். கருணானந்தம் ஆகியோர் கலந்துகொள்வர். மாலை போலீஸ் மைதானத்தில் பொதுக் கூட்டம் நடைபெறும். ஒலி பெருக்கி உண்டு.

* *

திருவத்திபுரத்தில் அண்மையில் திறவப்பெற்ற 'சுயமரியாதைத் திராவிடர் கழகம்,' இளைஞர் படிப்பகம், பெரியார் உருவப் படம் ஆகியவற்றின் திறப்பு விழா 30-8-45 அன்று கழகக் கட்டிடத்தில் தளபதி சி. என். அண்ணாதுரை அவர்களால் செய்யப் பெறும்.

* *

தென்னாற்காடு மாவட்டத் திராவிடர் கழக 2-வது மாநாடு தளபதி சி. என். அண்ணாதுரை அவர்கள் தலைமையில் 2-9-45 காலை 10-மணி முதல் திட்டக்குடியில் நடைபெறும். பெரியார் ஈ.வெ. இராமசாமி, தோழர்கள் கே. அன்பழகன், ஏ. பி. ஜனார்த்தனம், கே.வி. அழகிரிசாமி, காஞ்சி கலியாணசுந்தரம், புதுவை அ. பெருமாள் ஆகியோர் கலந்துகொள்வர். மாலை 3 மணிக்குத் தோழர்கள் கருப்பையா-அசனாம்பாள் சுயமரியாதைத் திருமணம் பெரியார் தலைமையில் நடைபெறும். மாலை 6 மணி முதல் பொதுக்கூட்டம் உண்டு. ஒலிபெருக்கி அமைக்கப்படும்.

* *

சென்னை சுயமரியாதை இளைஞர் மன்றத்தின் செயலாளராயிருக்க தோழர் பிரகாசத்திற்கும் தோழர் நீலாவதி அம்மைக்கும் 2-9-45 காலை 8-மணிக்கு சென்னை கிருஷ்ணப்ப நாயக்கன் தெரு நடராசர் மண்டபத்தில் தோழர் கா. மு. ரசாத்தினம் தலைமையில் திருமணம் நடைபெறும். தோழர்கள் தூ. சண்முகம், எஸ். குருசாமி ஆகியோர் பேசுவர்.

## பெரியார் ஈ. வெ. ரா. சுற்றுப்பிரயாணம்

26-8-45 வேலூர் (சேலம்) திராவிடர் கழக ஆண்டுவிழா.
28— அத்தூக்குடி-பன்னீர்செல்வம் சங்க ஆண்டுவிழா.
1-9-45 விருத்தாசலம் தோழர் முனுசாமி புதுவீடு திறப்புவிழா
2— திட்டக்குடி திராவிடர் கழக 2-வது மாநாடு.
3— மாலை கும்பகோணம் அரசினர் கல்லூரித் தமிழ்ப் பேரவையில் "தமிழ்" என்பது பற்றி சொற்பொழிவு.
இரவு— "வருங்கால வீரன்" என்ற நாடகத்துக்குத் தலைமை.

## வேண்டுகோள்

திருச்சி மாநாட்டுக்கு உங்கள் ஜில்லா கோட்டாப்படி, உங்கள் பங்கை உடனே அனுப்பிக் கொடுங்கள். யாராவது வந்து கேட்கவேண்டுமென்று காத்திருக்காதீர்கள். ஏராளமான பிரதிநிதிகளைச் சேர்த்துவையுங்கள்.

திருச்சி ஜில்லா முதலாவது மருத்துவர் மாநாடு 6-9-45 காலை 9மணிமுதல் சீரங்கம் தேவிரங்க ராஜா டாக்கீஸில் பண்டித எஸ்.எஸ். ஆனந்தம் தலைமையில் நடைபெறும். யாவரும் வருமாறு அழைக்கப்படுகிறது.

## மாணவருக்கு!

ஆர்வமிக்க மாணவத்தோழர்களே! நம் திராவிட மாணவர் இயக்கம் உருவாகி ஏறக்குறைய இரண்டாண்டுகள் ஆகின்றன. பல முக்கியமான ஊர்களில் மாணவர் கழகங்கள் நிறுவப்பட்டுள்ளன. எனினும், அண்மையில் திராவிட மாணவர் மாகாண மகாநாடு நடத்துவதற்காகப் பெருமுயற்சி நடந்துவருகின்றபடியால் பள்ளிக்கூடங்கள் உள்ள எல்லா ஊர்களிலும் திராவிடமாணவர் கழகங்களை உண்டாக்கி இயன்றவரையில் அதிகமான உறுப்பினர்களைச் சேர்த்து நமது முயற்சிக்கு ஊக்கமளிக்குமாறு வேண்டுகிறோம்.

சென்றவாரக் "குடி அரசி"ல் வெளியாகியுள்ள திராவிட மாணவர் மாகாண மாநாட்டின் வரவேற்புக்குழுவில் சேருவதற்கு ஒவ்வொரு மாணவர் கழகத்திலிருந்தும் ஒரு பிரதிநிதியின் பெயரைத் தெரிந்தெடுத்து எங்களுக்கு எழுதுங்கள்.

நடைபெறப்போகும் மாநாட்டிலே மாணவர் இயக்கத்தின் பொதுவான திட்டங்கள், எதிர்கால நடவடிக்கைகள் ஆகியவை உறுதி செய்யப்படும். இம் மாநாட்டை மிக்க சிறப்புடன் நடத்த விழைவதால் விரைவிலே உங்கள் உதவியை நாடி வருவோம், எதிர்பாருங்கள்!

என். நடமணி இராசன், திராவிட மாணவர் மாகாண மாநாட்டு வரவேற்புக் கழகத் தலைவர், ஈரோடு.

நாகையநல்லூர் தேவேந்திர பள்ளர் சங்க ஆண்டுவிழா தோழர் ஆர். ஒ. குப்பமுத்து தலைமையில் 18-8-45 அன்று நடைபெற்றது. பல தோழர்கள் பேசினர்.


ஜப்பான்மீது இறுதித் தாக்குதலுக்கான நடவடிக்கைகள் செறிந்தளித்துப் பெருகிக்கொண்டிருக்கின்றன

என்பது

ஒவ்வொருவருக்கும் தெரியும்

இதன் விளைவு என்ன என்பதை எண்ணிப்பார்த்து

மே. தகு. கவர்னரின்

துருப்புகள் உதவி நிதிக்கு
பணம் உதவி புரியுங்கள்.

(ஹானரரி டிரஷரர், கவர்னர் போர் நிதி C/o இம்பீரியல் பாங்க் இந்தியா என்ற விலாசத்துக்குப் பணம் அனுப்பவும்.)

குடி அரசு

1945-ஹு ஆகஸ்டு மீ 25-உ

## எதற்காகப் புதுக் கட்சிகள்?

பட்டம் பதவி வேட்டைக்காரர்களும், சமயசஞ்சீவிகளும், அரசியல் வயிற்றுப் பிழைப்புக்காரர்களும் "S. I. L. F. ஜஸ்டிஸ் கட்சி" என்னும் பேரால் கொடுத்துவந்த தொல்லைகள் பெரும்பாலும் ஒழிந்தன என்றே சொல்லலாம். அதிலும் மத்திய சட்டசபை, மாகாண சட்டசபை தேர்தல்கள் நடக்கப்போகின்றன என்ற சேதி வெளிவந்தவுடன் இக் கூட்டத்தார் இன்று இருக்குமிடம் தெரியாமல் அஞ்ஞாதவாசம் செய்யவேண்டிய நிலைமைக்குப் போய்க்கொண்டு இருக்கிறார்கள். இனி "ஸ்தலஸ்தாபனங்களுக்கும் தேர்தல் நடக்கும்" என்ற சேதி வெளியாகிவிட்டால் (அதுவும் அனேகமாய் சீக்கிரம் வெளியாகலாம்) இன்று ஏதோ பதவியில் இருப்பதாய்க் கருதிக் கொண்டு இருக்கும் சிலரின் நிலையும் "மூன்றாம் பேஸ்து கொடுத்தவர்கள்" நிலைக்கு வந்துவிடும்.

இவர்கள் "சேர்த்த" பண்டுகளும் "அமைத்த" அமைப்புகளும் "நியமித்த" பிரசாரகர்களும் இந்தப் பிரசாரகர்கள் "செய்த" பிரசாரமும் "சேர்த்த" அங்கத்தினர்களும் (உண்மையாய் இருந்தாலும் கூட) என்ன செய்யப்போகிறதோ அல்லது என்ன செய்யப் பயன்படப் போகிறதோ "ஆண்டவனே" அறிவான்.

சில பேர்கள் தலைவர்களாவதற்கு ஆக ஏதோ ஒரு கட்சி வேண்டுமே என்ற கவலையால் தலைவர் பெயரை முதலில் வெளிப்படுத்திவிட்டு அவர்களுக்காக கட்சி வேண்டுமே என்று கருதி ஒரு கட்சியின் பேரை பிறகு வெளியிட்டார்கள் என்றால் அதுவும் புதுக்கட்சி ஏற்படுத்த கருதி பற்று இருக்கும் கட்சி நிழலில் புகுந்தார்கள். அப்படி இருந்தும் தலைவருக்கு கட்சி அக்க கிழவன்றே கட்சியில் நம்பிக்கையில்லாமல் வெறுப்பு ஏற்பட்டதுடன் அவருக்கு எதற்கு ஆக தலைவர் பதவி வேண்டி இருந்ததோ அந்த காரியம் தலைவர் பதவி இல்லாமலே கிடைத்துவிட்டதுடன் துவக்கவிழாவுக்கு வந்த எல்லோரையும் கட்சிக்காரர்களாக பெயர் செய்து அவர்கள் எல்லோரையும் அனாதியாய் தெருவில் விட்டுவிட்டு அடித்தார் ஒரு பிரைஸ். (இதை பிரைஸ் என்பதா அல்லது அடித்தார் சவாரி என்பதா? எப்படியோ இருக்கட்டும்) இனி பிரைஸ் அடித்த தலைவர் பிடித்து வைத்துவிட்டுப் போன அடுத்த தலைவர் உடனே உடன் அசெம்பிளியும் அடைந்து தானவு நமம் பெற்று இவ்வளவு சீக்கிரம் சண்டை முடியுமென்றோ, இவ்வளவு சீக்கிரம் தேர்தல் வருமென்றோ எதிர்பாராத நிலையில் தலைவர் பட்டத்துக்கு பட்டாபிஷேகம் செய்யப்பட்டார் எனினும் பட்டத்துக்கு வந்ததும் தர்ச்சதனம்போல் சண்டை ஒழிந்து 'ஜெயித்த பட்டாளம் ஊருக்குள் கொள்ளை இடுவது' போன்ற நிகழ்ச்சிகள் கொள்ளையிடும்படியான தேர்தலும் வந்து தொலையப்போகிற காட்சி பார்க்கவேண்டிய பரிதாப நிலையும் ஏற்படுவதாக இருக்கிறது. அவ்வளவோடு இருந்தாலும் தொலைந்துபோகிறது என்று சொல்லலாம். தலைமைப் பட்டம் பட்டாபிஷேகம் செய்யப்பட்டவரைத் தலைவராக ஒப்புக்கொள்ளவோ தலைவர் என்று அழைக்கவோ சென்னையில் உள்ள இரண்டொரு கூலிகளைத் தவிர அதுவும் அட்வான்ஸிலேயே மாதக் கப்பம் வந்துசேராவிட்டால் வெளுத்துக் கட்ட ஒரு வண்டி சரக்கு கையில் வைத்துக்கொண்டு ஒரு பக்கம் ஒருகையை முஷ்டியாக்கி முகத்துக்கு நேரே காட்டிக்கொண்டும், மற்றொருபக்கம் மற்றொரு கையை நீட்டிக் கூலி கேட்டுக்கொண்டும் தலைவர் என்று சொல்லுவதல்லாமல், வேறு யாதிய மிகலாமல் தலைவர் என்றுசொல்ல ஆளில்லை. அதோடு "தலைவருக்கு கவர்னர் சிநேகம் இருக்கிறது" என்ற ஒரு சேதி பிரசாரம் இப்படிப்பட்டவர்களால் செய்யப்படாவிட்டால் "அவர் தலைவரல்ல", "நாங்கள் அந்த ஜஸ்டிஸ் கட்சி அல்ல" என்று சொல்ல வெகு பேர் முன்வந்து விடுவார்கள்.

எலெக்ஷனும் கிரமமாகவே வந்து இந்தக் கவர்னர் பெருமானும் இன்னும் ஒரு எக்ஸ்டென்ஷனும் விரும்பவில்லையானால், அதோடு ஸ்தலஸ்தாபனத் தேர்தலும் வந்து விடுமானால் அப்போது தெரியும் புதுக் கட்சிகள் வாழ்வு.

எனவே இந்தத் தன்மையில் இருக்கிறது புதிதாக ஏற்படுத்திக் கொண்ட "S. I. L. F. ஜஸ்டிஸ் கட்சி" என்று சொன்னால் யாரும் மறுக்கமாட்டார்கள் என்றே கருதுகிறோம்.

தவிர இதே நிலையில் பெரிதும் இதேபெயர்களால் இதேகாரியத்திற்கு ஆக மற்றொரு "குறைந்த விலை பதிப்பு" என்பதாக மற்றொரு கட்சியும், இமிடேஷன் சவரியாதைக் கட்சியும் தோன்றி இருக்கிறது. "அதுசக்கு" என்றால் பத்திரிக்கையில் (அதுவும் இரண்டொருவர் பணத்தில்) இதில் உள்ள காரியதரிசிகள் பிரசாரர்கள் ஆதரிப்பாளர்கள் அவர்களது வினைகள் காரியங்கள் இவர்களை ஆதரிப்பவர்கள் இவர்களுக்கு வால் பிடித்து கோவிந்தாப் போடுகிறவர்கள் இதை விளம்பரப்படுத்தக் கூலிகொடுத்து அமர்த்தப்பட்ட பத்திரிக்கைகள் ஆசிரியர்களின் இறந்தகால நிகழ்கால "ஜாதகம்" வாழ்க்கைச் சரித்திரம், நிலைமை ஆகியவைகளைப் பார்த்தால் இவற்றிற்குப் பொதுப்பேற்று நிற்கும் தலைவர் என்பவர், மோட்சத்துக்கு ஆக மாமாங்கக் குளத்தில் குளித்தவர்போல் "சகதியில் காலை வைத்துவிட்டார்" என்பதல்லாமல் வேறு ஒன்றும் தோன்றாது.

இது நிற்க, இந்த இரு கூட்டத்தாரும் தங்கள் புதுக்கட்சி விரகப் (கற்பனை) பிரவேசத்திற்கும் சொல்லும் காரணம் என்ன என்பது வாசகர்கள் கவனிக்கவேண்டியது முக்கியமாகும்.

முதலாவதாகச் சொல்லப்படுவது—இப்போது இருந்து வரும் கட்சிகள் "இரண்டிற்கும் ஒரே தலைவர் இருப்பது கூடாது." என்பது. "ஏன் ஒரே தலைவர் கூடாது" என்று யாராவது கேட்டால், மற்றவர்களுக்கும் ஒரு தலைமைப்பதவி கொடுக்கட்டுமே. ஒருவரே எல்லாப் பெருமையும் அடைவதா? 25

# திருச்சியில்

## செப்டம்பர் 29, 30 தேதிகளில் நடக்கும், ஜஸ்டிஸ்—சுயமரியாதை

# மா நா டு கள்

★

## திராவிட மக்களின் எதிர்கால வாழ்வைச் சித்தரிக்கும் மாநாடுகள் ஆகும்.

## தவறாமல் வந்து அண்மையில் நடக்கும் போராட்டத்திற்காகத் திரட்டப்படும் சேனையில் உங்கள் பெயரைப் பதிந்துகொள்ள

# வா ருங் கள்!

வருட காலம் தலைவராய் இருந்தது போதாதா? என்பது.

இரண்டாவதாக, பெரியார் தான் தனக்கு ஒரு பதவியும் வேண்டாம் என்கிறாரே பதவிக்கு வரக்கூடிய தோழர்கள் ஷண்முகம் முதலியவர்களுக்கு ஜஸ்டிஸ் தலைமைப் பட்டம் கொடுக்கட்டுமே என்பது.

இதை யார் சொல்லுகிறார்கள், யார் சொல்ல ஆரம்பித்தார்கள் என்றால் இவர்களுக்குத் தலைமைப் பதவி வந்தால் இவர்களிடம் பணம் தட்டலாம் என்றும், யார் பயன்பெறலாம் என்றும் கருதினார்களோ, ஆசைப்பட்டார்களோ அவர்களேதான்.

மூன்றாவது-பெரியாருக்கு இங்கிலீஷ் தெரியாது, அரசியல் தந்திரம் தெரியாது என்பது. இது யார் சொல்வது என்றால் பெரியாரே ஆயுள் தலைவராக இருக்கவேண்டுமென்று அதிபாடிக் கூலி கேட்டவர்களேயாகும்,

மற்றொரு கூட்டம் சொல்லுவது என்னவென்றால்-'பெரியார் பணத்துக்குக் கணக்குக் காட்டுவதில்லை' என்பது, 'கட்சிக்கு ஏது பணம்? யார் கொடுத்தார்கள்? யாருக்குக் கணக்குக்காட்டவேண்டும்?' என்று யாராவது நேரில் கேட்டால் அதற்கும் பதில் "நீங்கள் கண் மூடிக்கொண்டு தலைவரைப் பின்பற்றுகிற மூட நம்பிக்கைக்காரர்கள்" என்று சுயமரியாதை பேசுவது. இவை சில்லரை ஆட்கள், புதுக்கோட்டை அம்மன் காசு ஆட்கள் சொல்லுகிற குற்றங்கள் என்றால் இனி பெரிய ஆட்கள், டாலர்கள், பவுன்கள் பேசுவது என்ன என்றால்,

"ஜஸ்டிஸ்கட்சியால் சுயமரியாதைக் கட்சி கெட்டுப்போய் விட்டது." என்றும், மற்றொரு மோசக்காரர்கள் கூட்டம் "சுயமரியாதைக் கட்சியால் ஜஸ்டிஸ் கட்சி கெட்டுப்போய் விட்டது" என்றும் சொல்லுவதும், "கெட்டுப் போன காரியம் என்னப்பா" நன்றாய் இருந்ததாக நீ கருதிக் கொண்டிருந்தகாலத்தில் கட்சிகள் இருந்த நிலை என்ன? கட்சிக்கு நீ செய்த தொண்டு என்ன? நீ கொடுத்த பணம் என்ன? என்று கேட்டுவிட்டு மேலும் 'அப்பா நீ எத்தனை தடவை ராஜினாமா கொடுத்துவிட்டு ஓடினாய்? எத்தனை தடவை 'எனக்கு சொந்தக்காரியம் இருக்கிறது' என்று சொல்லிவிட்டு விலகி இருந்தாய்? எத்தனைதடவை 'என்னால் ஒன்றும் செய்யமுடியாது' என்று தலைவருக்கு எழுதினாய் இது யாருக்கும் தெரியாதா? என்று கேள்வி கேட்டால் அதற்குப் பதில் 'அப்போதைய நிலைமை அப்படி இருந்தது. அதனாலேயே இன்றும் அப்படித்தான் இருக்கவேண்டுமா' என்பதல்லாமல் வேறு பதில் இல்லை.

இனி கனவான்கள் மற்றொரு சமயத்தில் அதாவது காரியங்கள் ஒழுங்காய் நடப்பதைக் காணும் போது வெட்கப்படும்போது சிலர் "மீட்டிங் நடக்கிறது, அலைகிறார்கள் நன்றாய்ப் பேசுகிறார்கள், பாடுபடுகிறார்கள், உணர்ச்சி இருக்கிறது ஆனால் அமைப்பு இல்லை ஒழுங்கு முறை இல்லை" என்பதாகக் குற்றம் சாட்டுவது.

"அமைப்பு ஒழுங்கு முறை இல்லாமலா இவ்வளவு காரியம் நடக்கிறது. ஜில்லா தாலூக்காதோறும் சங்கம் இருக்கிறது. வருடம்தோறும் ஜில்லா தாலுக்கா மாநாடுகள் நடக்கின்றன. வாரம் தோறும் பல கூட்டங்கள் நடந்ததாக, பல ஆயிரக்கணக்கான மக்கள் கூட்டம் கிராமங்களில் நடந்ததாக எல்லாப் பத்திரிகைகளிலும் சேதி வருகின்றதோடு அதாவது ஒரு சங்கத்திற்குத் தீர்மானமோ தந்தியோ செய்யும்படி தலைவர் சொன்னால் உடனே 200க்கு குறையாமலேயே தீர்மானங்கள் தந்திகள் பறக்கின்றன, 35000 மெம்பர்கள் 200 க்கு மேற்பட்ட அமைப்பு இருக்கின்றன. இந்நிலையில் அமைப்பு இல்லை, ஒழுங்கு இல்லை என்று சொல்லுகிறீர்

களே இது நாணயமா" என்று யாராவது கேட்டால் அதற்குப் பதில் என்னவென்று பார்த்தால் அதுதான் ரசமான சேதியாக இருக்கும். என்னவென்றால்,

"எல்லாம் சரி. நிலைமை நன்றாகத்தான் இருக்கிறது, இருந்தாலும் தலைவரின் சர்வாதிகாரப் போக்கு நமக்குப் பிடிக்கவில்லை, யாரையும் கலப்பதில்லை, யாரையும் மதிப்பதில்லை, யாரிடமும் எந்த வேலையும் ஒப்படைப்பதில்லை, எல்லாம் தானே பார்ப்பது, யாரையும் நம்புவதில்லை இப்படி நடந்தால் அவரது உடல் நலம் என்னாகும். மற்றவர்கள் சுயமரியாதை என்ன ஆகும்." என்று சொல்லி வருத்தப்படுவது போல் பேசுவது. ஆகிய இவைகளும் இவை போன்றவைகளும் தான் இன்று "புதுக்கட்சிகளுக்கு" காரணங்களாக இருக்கின்றன.

மற்றும் இப்படி பேசுவதாய்ச் சொல்லுகிற தோழர்கள் யார் என்றால், மொத்தமாய்ப் பார்த்தால் நிர்வாகக் கமிட்டிக்குச் சரியாய் வராதவர்கள், தாங்கள் ஏற்றுக்கொண்ட வேலையை, தங்களுக்குக் கொடுத்த வேலையைச் சிறிதும் செய்யாதவர்கள்.

கூட்டத்திற்கு வருவதாய் ஒப்புக்கொண்டு பத்திரிகையில் போடச்செய்து விளம்பரம் ஆன பிறகு பல ஆயிரக்கணக்கான மக்கள் வந்து சேரும்படி நிகழ்ச்சிகளைப் பொறுப்பாளர்கள் ஏராளமான செலவுசெய்து ஆடம்பரம் செய்தபிறகு வர சவுகரியமில்லை என்று தந்திகூட கொடுக்காமலும், மனதார குறிப்பிட்ட அழைப்புக்கு போகமுடியாது என்று கருதி இருந்தும் விளம்பரம் செய்வதை அனுமதித்துக்கொண்டு இருந்துவிட்டு போகாமல் ஏமாற்றியும் இயக்கக் காரியத்தைவிட சீட்டாட்டம் உல்லாசவிருந்து, டிராமா, சினிமா, பந்தயம், தங்கள் சிநேகிதர் கூட்டுறவு முக்கியம் என்று கருதுகிறவர்களும், தலைவர் இவர்கள் வீடு தேடிவந்து காத்திருக்கிறார் என்று முதல்நாள் மாலை 7 மணிக்கு தலைவரின் ஆள்சென்று சொன்னால் "இருக்கச்சொல் 2 ஆட்டம் ஆடிவிட்டு வருகிறேன்" என்று சொல்லி அனுப்பிவிட்டு விடியற்காலம் 5மணிவரை விழித்துக்கொண்டு உட்கார்ந்திருந்த தலைவரிடம் 'மன்னிக்கணும்' என்று சொல்லிக்கொண்டு வந்து 10 நிமிஷம் பேசிவிட்டுப் போய்விடுகின்றவர்களும், ஊரில் இருந்தும் தலைவர் தங்கள் ஊருக்கு வந்து இரண்டு நாள் இருந்தும் வந்து பார்க்காதவர்களுமான பிரபுக்கள் தங்கள் பணத்தைக் கடவுளாக, கட்சியாக, தங்கள் வாழ்வை பதவியை 'தேவேந்திர' போகமாகக் கருதி இருக்கிற மக்கள் இப்படிப் பேசுகிறார்கள் என்றால் தலைவரின் சர்வாதிகாரத்தைப் பற்றி இவர்களுக்குப் பேச யோக்கியதை இருக்க முடியுமா? உண்மையில் இவற்றைப் பொறுத்துக்கொண்டும் இவர்கள் கட்சியில் இருக்க இடம் கொடுத்துக் கொண்டும் இருந்ததால் தலைவர் சர்வாதிகாரம் செய்தவராவாரா அல்லது தலைவருக்கு சாதாரண மரியாதைக்குரிய அதிகாரம்கூட செய்யத் தெரியவில்லை என்று சொல்லத்தக்கவராவாரா என்பது யோசிக்கத்தக்கதாகும்.

இன்றுங்கூட ஜில்லாபோர்ட் பிரசிடெண்டு பதவி விடவேண்டும், மெம்பர் பதவி விடவேண்டும், சேர்மென் பதவி விடவேண்டும், பட்டம் விடவேண்டும், சர்க்கார் கொடுத்த கவுரவ நியமனம் விடவேண்டும், தேர்தலுக்கு நிற்கக்கூடாது என்கின்ற தீர்மானம் கட்சியில் இல்லாமல் இருந்திருந்தால், மற்றும் ஏதாவது தீவிர கிளர்ச்சி செய்யவேண்டும் என்று தலைவர் அடிக்காமல் இருந்திருந்தால் இன்றைய புதுக் கட்சிகளுக்கும், குற்றம் குறை சொல்லும் தன்மைக்கும் இடம் ஏற்பட்டிருக்க முடியவே முடியாது. ஏதோ சில கூலிகள் கூப்பாட்டுடனும் தலைவரிடம் உள்ள பொறாமைக்காரர்கள் இக்கூலிகளுக்கு ஏதாவது கொடுத்து வையும்படிச் செய்து திருப்தி அடைவதுடனுமே இருந்திருப்பார்கள். ஆகவே புதுக் கட்சிகளுக்கு காரணம் பட்டம் பதவி வெறியும் ஜயில் பயமும் காரணமே தவிர பணமல்ல, கணக்கல்ல, அமைப்பல்ல, ஒழுங்குமுறை அல்ல, சர்வாதிகாரமல்ல, இங்கிலீஷ் தெரியாமை அல்ல, இவர்களுக்கு வேலை பங்கிட்டுக்கொடுக்காமை அல்ல என்பதை பந்தயம்கட்டி ஆதாரத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

**திராவிடர் கழகத்திற்கு**
**(ஜஸ்டிஸ் கட்சிக்கு)**
**25-8-45 வரையில்**
**அங்கத்தினர்கள் 33947**
**சந்தா ரூ. 3370-0-0**

இதை ஏன் தெரிவிக்கிறோம் என்றால்,

பல கூலிகளின் பத்திரிகைகளிலும் நாலாந்தர மக்களை கூலிக்கமர்த்தி மிக்க இழிவாகவும் ஈனத்தனமாகவும் தலைவரைக் குறை கூறியும் தலைவரது வேலைகளுக்கு கேவலமான எண்ணம் கற்பித்தும் கட்டுப்பாடாகப் பிரசாரம் செய்யப் "பலமான" திட்டம் போட்டு காரியம் நடக்கிறபடியால் பொது மக்களுக்குச் சிறிதாவது உண்மை விளங்கட்டும் என்பதற்கு ஆகவே யாகும்.

குறைகூறினவர்கள் யார்? புதுக் கட்சிகள் துவக்கித் தொல்லை கொடுப்பவர்கள் யார்? ஆள் விட்டு வையச் செய்கிறவர் யார்? இந்த ஆட்களும் எப்படிப்பட்டவர்கள்? என்பதை மனச் சாட்சிக்கு விரோதமில்லாமல் சிந்தித்துப் பார்த்து யாரும் ஒரு முடிவுக்கு வர வேண்டும் என்று வேண்டுகிறோம். நல்ல காரியங்கள் நடக்க வேண்டிய சந்தர்ப்பத்தில் அதுவும் ஒருபெரியசமுதாயத்தின் இழிநிலை மாற்றமடையவேண்டிய அளவு தலைகீழ் புரட்சி நடக்கவேண்டிய சமயத்தில் இப்படி ஒரு கூட்டம் புறப்பட்டதானது மிகவும் வருந்தத்தக்க சம்பவமானாலும் உண்மை நிலைமையை இவ்வளவுகூட வெளியிடாமல் இருக்க முடியவில்லை.

ஆதலால் உண்மைகளின் ஒரு சிறிது, அதுவும் மிக்க மனவருத்தத்துடன், வெளியிடுகிறோம்.

## வேவல் பிரயாணம்

வைஸிராய் வேவல் பிரபு நேற்று லண்டனுக்குப் பிரயாணமாகிவிட்டாரென்றும், பம்பாய் கவர்னர் சர் ஜான் கால்வில் தற்காலிக வைஸிராயாக இருப்பாரென்றும் தெரிகிறது.

## காந்தி விஜயம்

"அணுக்குண்டு" (Atomic Bomb)

தம்பி:- ஏ அண்ணா டேய்! காந்தியார் தென்னாட்டுக்கு வருகிறாராம். எதற்கு ஆக வருகிறார்டா?

அண்ணன்:- அது உங்களுக்குத் தெரியாதுங்களா தம்பி! சொல்றேன் கேளுங்கோ. இப்போ எலக்‌ஷன் நடக்கப்போறதாமாமே.

த-பி:- ஆமாடா அண்ணா, அப்படித்தான் சொல்லிக்காராங்கோ.

அ-ன்:- அதுக்குத்தான்.

த-பி:- அதுக்கு காந்தியார் ஏன் வரணும்?

அ-ன்:- தென்னாட்டிலே எலக்‌ஷன் பிரசாரம் செய்ய ஆளில்லை. ஆச்சாரியாரும் இல்லை. பாப்பான்களுக்கும் மரியாதை குறைஞ்சு போச்சு தமிழனுக்குள்ளும் கச்சி இருந்தாலும் திராவிட உணர்ச்சி வலுக்குது.

சுப்பராயகவுண்டர் பொதுவானவரானாலும் அவர் ஆச்சாரியார் பக்கம்.

முத்துரங்கமுதலியாருக்கு ஆச்சாரியார் கூட்டம் பிடிக்காது.

அப்பறம் ஆரு? காமராஜ நாடார், அண்ணாமலைபிள்ளை, உபயத்துல்லா சாயபு, சுப்பையாமுதலியார் இந்தமாதிரி ஆளுங்கதான் இருக்குது. இந்த ஆளுங்களுக்கும் பார்ப்பாரப்பத்திரிக்கை பிரசாரம் இருந்தாத்தான் செலாமணி உண்டு இவங்களுக்கு முன்னைமாதிரி பார்ப்பாரிட்ட பக்தி கிடையாது.

த-பி:- பத்திரிகைங்க இருக்கிறதே அது போதாதா?

அ-ன்:- அது தெரியாதா தம்பி உங்களுக்கு? அதுக்குன்னாலே கச்சி!

த-பி:- தமிழருக்குள்ளே நாடிமுத்து பிள்ளை, வெள்ளியங்கிரிக் கவுண்டர், தேவர், வெங்கிடுசாமி நாயுடு இந்தமாதிரி பெரியவுங்களோ இருக்காங்களே?

அ-ன்:- இவுங்களுக்குத்தான் என்ன மரியாதை வாழுது. வெள்ளியங்கிரிக் கவுண்டருக்கு வேணா எக் கவுண்டர்மார்கிட்ட செல்லும், மத்தவங்களுக்கு பாப்பார் ஆக்கிவிட்டாத்தானே திக்குமுடியும்; நடக்க முடியும்! சொந்தத்தில் இவங்க பேசுவதற்கு வெளியில் புறப்படமாட்டாங்க.

அதனாலே தான் காந்தி வர்ராரு. வந்து எதாவது ஏதேயன்னைப் பரப்பாரு. இக்கட்டுபோனா புது யோசனை பண்ணுவாரு.

அதுக்குத்தான் வர்ராரு.

த-பி:- வாட்டமே, பார்ப்போம்!

## பெங்களூரில் பெரியார்

8-8-45 பெங்களூர் திராவிடர் கழகச் சார்பில் ஆர்ய வித்யாசாலா பண்டபத்தில் தோழர் H.R. குருவாரெட்டி B. A, LL. B., M. L. C., ஜில்லாபோர்டு தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற பெரிய பொதுக் கூட்டத்தில் பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். கூட்டத்திற்கு வந்திருந்தவர்களில் முக்கிய மானவர்கள்:- மாஜி காங்காஸ் தலைவர் தோழர் கோவிந்தராஜலு நாயுடு B. A., LL. B., வக்கீல், "ஒக்கலிகர பத்திரிகை" ஆசிரியர் தோழர் கே. பி. முத்தப்பா B. A, LL. B., தோழர் சஞ்சீவையா, ஒக்கலிகா சங்கத் தலைவர் தோழர் பி. டி. ராமையா பி. ஏ, தோழர் எம். கே. லிங்கே கௌடா M. L. C., முன்சீப்கோர்ட் தோழர் லிங்கப்பா ஆகியோர்.

மறுநாள் 9-8-45 மாலை பெங்களூர் சி. & எம். ஸ்டேஷன் தொப்பா முதலியார் தோட்டத்தில் தோழர் முத்து தலைமையில் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். திராவிட கழகச் செயலாளர் தோழர் நாராயணசாமி நன்றி கூறினார். மேற்கண்ட இரு கூட்டங்களின் நடவடிக்கைகளும் பெங்களூரிலிருந்து வெளியாகும் "டெய்லி போஸ்ட்" என்ற ஆங்கிலத் தினசரியின் 10-8-45 இதழில் மிக்க விளக்கமாகக் காணப்படுகின்றன.

## தூத்துக்குடி ஏ. டி. பன்னீர் செல்வம் ஞாபகார்த்த வாலிபர் சங்கம்

திரா. கழக 4வது ஆண்டுவிழா வருகிற 28-8-45 செவ்வாய்க்கிழமையன்று நடைபெறும். அதுசமயம் திராவிடர் தலைவர் பெரியார் ஈ. வெ. ரா., தளபதி சி. என். அண்ணாதுரை எம். ஏ., ஈ. வெ. கி. சம்பத், டார்பிடோ ஜனார்த்தனம் எம். ஏ., என். அர்ச்சுனன் (இளையருமார பட்டக்காரர்) முதலியவர்கள் கலந்துகொள்வார்கள். தயவுசெய்து வெளியூர் தோழர்கள் இதையே அழைப்பாகக் கொண்டு குறித்த நேரத்தில் விழாவில் கலந்து கொள்ளுமாறு கோருகிறேன்.

ஏ. எஸ். ராஜன், செயலாளர்.

## குடந்தைக் கல்லூரியில் பெரியார்

கும்பகோணம் அரசினர் கல்லூரித் தமிழ்ப் பேரவையின் சார்பில் 3-9-45 மாலை 5 மணிக்கு பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் "தமிழ்" என்பதைப்பற்றிச் சொற்பொழிவாற்றுவார்கள்.

## "வருங்கால வீரன்"

திருநாகேஸ்வரம் புத்துலக சீர்திருத்த நாடகசபா சிறப்பாக கும்பகோணம் ராஜா டாக்கீசில் 3-9-45 இரவு 9-30 மணிக்கு பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் தலைமையில் 'வருங்கால வீரன்' என்ற சமுதாயசீர்திருத்த நாடகம் நடைபெறும்.

## திருச்சி சுயமரியாதைத் தோழர்களுக்கு வேண்டுகோள்

சென்ற 17-6-45-ந் தேதிய கூட்ட முடிவுப்படி திருச்சி ஜில்லா சுயமரியாதைச் சங்கம் 8-7-45-ந் தேதி ஆரம்பிக்கப்பட்டு காரத்தில் அங்கத்தினர் சேர்க்கும் வேலை துரிதமாக நடைபெற்று வருகிறது. இயக்க ஆரம்ப காலத்தில் இருந்தது போலவே சுயமரியாதை இயக்கத்திற்குத் திருச்சி தாயகமாக விளங்க வேண்டுமென்பதை மனத்திற்கொண்டு கட்டுப்பாட்டோடும், நம்முள் ஒற்றுமையோடும் பணி செய்ய விரும்புகிறோம்.

சங்கத்திற்கு வாடகைக்குத் தனி இடமும், ஒரு அலுவலரும் தேவை. துண்டுப் பிரசுரம், பொதுக் கூட்டங்கள், கிராமப் பிரசாரம் இவைகள் மூலம் கொள்கைகளைப் பரப்புதல் தான் நம் முன்னணி வேலை. இவற்றிற்குச் சங்கத்தின் பொருளாதார நிலை உயர்த்தப்பட வேண்டும் ஆகையால் தோழர்கள், குறிப்பாக மாணவத் தோழர்கள் பெருவாரியாக அங்கத்தினர்களாகச் சேருவதுடன் பிறரையும் சேர்க்கும் சேவையில் ஈடுபட விரும்புகிறோம். திருச்சியில் அண்மையில் நடைபெறவிருக்கும் மாகாணமகாநாடுகள் வெற்றிபெற நமது முயற்சி அத்தனையும் செய்வோமாக!

கீழ்க்கண்ட இடங்களில் அங்கத்தினர் விண்ணப்பத்தாள்கள் கிடைக்கும்.

1. டி. எம். விசுவலிங்கம், ராஜா பல்பொடி வியாபாரம், சந்துக்கடை, பெரியகடை வீதி, திருச்சி. 2. கே. கே. சாமி, சர்பத் வியாபாரம், சின்னக்கடைத் தெரு, திருச்சி. 3. டி. வி. சுந்தரம், சுந்தரம் வாட்ச் கம்பெனி, தெப்பக்குளம், திருச்சி. 4. சிங்காரம், தேவதானம், திருச்சி, 5. எஸ். பிரான்சிஸ், பெரியபாளையம், வாசிப்பினரி, திருச்சி. 7. அழகசாமி, கிழக்குசல், திருச்சி. 8. டி. பி. முத்துசாமி, மளிகை, கீழமார்க்கட், திருச்சி.

## தஞ்சை ஜில்லா திராவிடர் கழகத் தோழர்களுக்கு அறிவிப்பு

திருச்சியில் செப்டம்பர் மாதம் 29, 30 தேதிகளில் நடைபெறப் போகும் மாகாண மாநாட்டுக்கு தஞ்சை ஜில்லா சார்பாக ரூ. 1500 வசூலித்துக் கொடுப்பதாக வாக்களித்திருக்கிறபடியால் அதற்கான டிக்கட்டுகளும் நன்கொடை ரசீது புத்தகங்களும் ஊர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. டிக்கட் விற்பனைக்காக பின்கண்ட தேதிகளில் ஒரு சுற்றுப்பிரயாணம் அடியிற்கண்ட நிகழ்ச்சிக் குறிப்புப்படி வருவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். ஆங்காங்குள்ள திராவிடர் கழகத் தோழர்களும் தனிப்பட்ட இயக்க அபிமானிகளும் எங்களுக்கு ஆதரவு கொடுத்து நன்கொடை மூலமாகவும் டிக்கெட் விற்பனை மூலமாகவும் பூராத் தொகையும் வசூலாவதற்குண்டான காரியங்களை பூர்த்திசெய்து கொடுக்கக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

தோழர்கள் கே. கே. நீலமேகம், வி. சின்னத்தம்பி, பி. ஆர். பொன்னுசாமி ஆகியோர் 5-9-45 காலையில் புறப்பட்டு அதுமுதல் ஒருவாரம் சுற்றுப்பிரயாணம் செய்வார்கள்.

சீர்காழி, மாயவரம், பேரளம், நன்னிலம், திருவாரூர், கீவளூர், நாகப்பட்டணம், நாகூர், காரைக்கால், நீடாமங்கலம், மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி, பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் ஆகிய ஊர்களுக்கு வருவார்கள். போக்குவரத்து வாகனங்கள் வசதிக் குறைவால் நேரம் குறிப்பிட்டு நிகழ்ச்சி வெளியிடவில்லை. ஒவ்வொரு ஊரிலும் வசூல் முடிந்ததும் மறு ஊருக்கு வருவார்கள். அதற்கு முன் டிக்கட் தேவையுள்ளவர்கள் கே. கே. நீலமேகம், திராவிடர் கழகம், கும்பகோணம் என்ற முகவரிக்கு எழுதினால் அனுப்பி வைக்கிறோம்.

கே. கே. நீலமேகம்,
திராவிடர் கழகம், கும்பகோணம்.

---

16-8-45 கல்லாக்கோட்டை இலவச வாசகசாலையின் ஆண்டுவிழா தோழர் முருகேசக் கவிராயர் தலைமையில் தோழர்கள் பிரகாசம் B. Sc., பாலசுப்பிரமணியன், வீராசன் ஆகியோர் பேசினார்.

## சங்கீதம் கற்ற பெண்கள் தங்கள் கணவனின் "எமன்கள்"

"தோழர்களே! எல்லா வேகங்களையும் விட மனோவேகம் தான் அதிவேகமான வேகம் என்று சொல்வதுண்டு. ஆனால் இப்போது மக்களின் பகுத்தறிவின் வேகம் இதை மீறிவிட்டது. கோயமுத்தூர் தோழர் ஜி. டி. நாயுடு அவர்களை சமீபத்தில் சந்தித்து நான் பேசின போது அவர் சொல்லுகிறார் "சங்கீதம் கற்ற பெண்கள் தங்கள் கணவனின் எமன்கள்" என்று அவர் சொல்வது தப்பு என்று உடனே எப்படிச் சொல்ல முடியும்? நாம் இதை இனி அனுபவ முறையில் வைத்துப் பார்க்கவேண்டியதோடு, அவரை நான் இக்கவிஷயத்தைப் பத்திரிகை மூலம் தெளிவுபடுத்த வேண்டுகின்றேன்" என்று டாக்டர் கோபால், தலைவர், சுயமரியாதைச் சங்கம், செவ்வாய்ப்பேட்டை, சேலம், எழுதுகிறார்.

## திருச்சி திராவிட வாலிபர் கழகம்

23-8-45 மாலை 6-30 மணிக்கு திருச்சி டவுன் ஹாலில், திராவிட வாலிபர்கள் சார்பில் ஒரு பொதுக் கூட்டம் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் தலைமையில் சிறப்புடன் நடைபெற்றது.

தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், கே. வி. அழகிரிசாமி, ஜனார்த்தனம், புலவர் குழந்தையா, டி. பி. வேதாசலம் முதலியவர்கள் பேசினார்கள். இரவு 9-30 மணிக்கு வந்தனத்துடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

## காங்கிரஸ் தலைவர் லீகில் சேர்ந்தார்!


முன்பு மத்திய சட்டசபையில் காங்கிரஸ் கட்சித் துணைத்தலைவராயிருந்த ஜனாப் அப்துல் கையூம்கான் என்பவர் தாம் லீகில் சேர விரும்புவதாயும், ஜனாப் ஜின்னாவின் பட்டையை எதிர்நோக்கியிருப்பதாயும் எழுதியிருந்த ஒரு கடிதத்திற்குப் பதிலாக ஜனாப் ஜின்னா கொடுத்துள்ள தந்தியில் நாளையமுன்ன எந்த முஸ்லீமுக்கும் காங்கிரசில்-அதுவும் சிம்லா மாநாட்டுக்குப் பின்னர்-இடமில்லையென்றும், முஸ்லீம்களின் தேசிய சபையான லீகில்தான் சேரவேண்டுமென்றும் குறிப்பிட்டுள்ளார்.

## தேசாபிமானமா, துரோகமா?

சுபாஷ்சந்திரபோஸும் அவரைச் சேர்ந்த பட்டாளமும் ஜப்பானியருடன் சேர்ந்து வேலைசெய்ததற்குக் காரணம் இந்திய தேசத்தின் மேல் அவர்களுக்கிருந்த பக்திதான் என்றும், அவர்களுக்கும் தங்களைப் போலவே தேசாபிமானம் அதிகமென்றும், ஆனால் அவர்கள் சென்ற வழிதான் தவறென்றும் ஜவகர்லால் நேரு உருக்கமாகப் பேசுகிறார்.

ஆனால் 'ஸ்டேட்ஸ்மன்' என்ற ராஷ்டிரப் பத்திரிகையோ, "இந்தியக் 'குவிஸ்லிங்' (துரோகி) ஆகிய சுபாஷ்சந்திரபோஸ் தான் சிங்கப்பூரில் நிறுவப்பட்ட 'இந்திய சர்க்கார்'இன் முக்கிய சூத்திரதாரியாக இருந்தவர். 1936-ம் ஆண்டு முதற்கொண்டே இவர் ஜப்பானிய ஒற்றர் இயக்கத்தின் ஏஜண்டாகவும் இருந்து வந்தவர்" என்று கடுமையாக எழுதுகிறது.


உடலைச் சிங்காரித்தாய்!



உயிருக்கு என்செய்தாய்?
அதற்கு
உடலை வளர்த்து உயிரைக்காப்பாற்றி
குடலைக்காப்பதே மிகவும் முக்கியம்

டாக்டர் ஜெயராம்ஸ்
காய சுத்தி லேகியம்

படாடோப விளம்பரமில்லாமலே நூற்றுக்கணக்கான குடும்பங்களில் உபயோகிக்கப்படும் அற்புத மருந்து. இரண்டேவேளையில் குணம். இல்லாவிடில் திரும்புவது பணம்.

தலைவலி, மயக்கம், வாந்தி, நெஞ்சுவலி, நெஞ்செரிச்சல், மாரடைப்பு, புளித்தேப்பம், வயிற்றுவலி, இடுப்புவலி, குடல்வாதம், மூலநோய் முதலியவைகளை நீக்கி மலத்தை சுகமாய்ப் பிரிக்கும்.

1சேர் டப்பி ரூ. 4, ½சேர் டப்பி ரூ. 2-2-0. V. P. P. வேறு.

ஜெயராம் வைத்தியசாலை,
28, [illegible], கும்பகோணம்.